மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
O.S.NO.1/2018

11.08.2018

குறுக்கு விசாரணை
வா.சா.1- திருத்துவராஜ், த/பெ.சவரியார்

நான் மற்றும் மற்ற வாதிகள் அனைவரும் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இறந்தவர் என்னுடைய தகப்பனார். அவரும் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர். நான் கிறித்துவனாக இருப்பதால் இந்து மத வாரிசு உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த நீதிமன்றத்தில் பரிகாரம் கோர இயலாது என்றாலும், இந்திய வாரிசு உரிமைச் சட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில்தான் பரிகாரம் கோர முடியும் என்றால் சரியல்ல. மேற்படி காரணத்திற்காகவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், இந்த நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை விசாரித்து பரிகாரம் தர அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய தகப்பனார் பெயர் சவரியார். எப்போது இறந்தார் என்றால் 12.02.2004 ல் இறந்தார். எங்கு இறந்தார் என்றால் பல்லடம் தாலுக்கா, கணபதிபாளையம் அருகில் உள்ள மலையம்பாளையத்தில் இறந்தார். தாயார் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். அவர் பெயர் ஜெர்கிருஸ்துவ மேரி. அவர் 1ம் வாதி. என்னுடைய தகப்பனாருக்கு 2 பையன் ஒரு பெண் வாரிசுகள். என்னுடைய அண்ணன் பெயர் உலக இரட்சகர், தங்கை பெயர் கேத்தரின் மேரி. தகப்பனாருக்கு எங்கள் 4 தவிர வேறு ஒரு பெண் மற்றும் பையன் உள்ளனரா என்றால் வேறு யாரும் இல்லை. வருவாய் ஆய்வாளர் விசாரணையில் தற்போது உள்ள வாரிசுகள் தவிர வேறு ஒரு மகனும், மகளும் இருந்துள்ளார்கள் என்று அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் அவர்கள் என்னுடைய சிறிய வயதிலேயே இறந்துவிட்டார்கள். அந்த விவரத்தை எல்லாம் என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சிறிய வயதிலேயே இறந்து விட்டதால் சொல்லவில்லை. இறந்தவர்களின் பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என் அப்பா இறந்து 13 வருடங்கள் ஆனதாலும், இறந்தவர்களின் விவரங்களை சொல்லாததாலும், கிறித்துவ மதத்தைச் சார்ந்த காரணத்தினாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கத்து என்றாலும், இந்த நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. ஒரு பையன் மற்றும் ஒரு பெண் இறந்து விட்டதாக சொல்லும் நிலையில் அவர்களுடைய இறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் அப்பொழுது எல்லாம் அவ்வாறு வாங்கும் வழக்கமே இல்லை. என் தகப்பனாருக்கு பல்லடம்

Sd/-திருத்துவராஜ்

தாலுக்காவில் எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். வழக்குரையில் உண்மையான சங்கதிகள் சொல்லாததாலும், வாரிசுகள் பற்றிய உண்மையான விவரங்களையும் சொல்லாததாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாரின் அப்பா பெயர் ஆரோக்கியசாமி. அவருக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் இல்லை. நான் வா.சா.ஆ.2 பத்திரம் தாக்கல் செய்துள்ளதில் என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் ஆரோக்கிய சேர்வை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அவர் பெயர் ஆரோக்கியசாமிதான் எப்படி வந்தது என்று தெரியவில்லை. என்னுடைய வழக்கு சங்கதிகளும், என் சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது என்றாலும் சரியல்ல. ஆகவே நான் சமூக நீதிமன்றத்தில் பரிகாரம் கோர அருகதை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-திருத்துவராஜ்

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha,11.8.2018
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்